**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.44 /2025 நாள்- 08.06.2026

**வா.சா.2. சூரிய நாராயணன்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

வாதி அழைத்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்திற்கான விவரங்களை என் வழக்கறிஞருக்கு வாதி தான் கூறினார் என்றால் சரிதான். பிரதிவாதி கடன் வாங்கியதாக கூறும் தேதி என் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள தேதி அன்று தான் பிரதிவாதி வாதியிடம் கடன் வாங்கியதாக நான் கூறுகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி, வாதியிடம் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்ட தேதியை தவிர வேறு தேதியில் கடன் வாங்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கும், வாதிக்கும் வழக்கில் கண்ட தேதியிட்ட கடனை தவிர வேறு கடன் கிடையாது என்றால் சரிதான். பிரதிவாதியை எனக்கு நேரடியாக பழக்கம் கிடையாது பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டு எழுதிய தேதி அன்று தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டை பிரதிவாதி தான் கொண்டு வந்தார். வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டை பாதி பிரதிவாதியும், மீத பாதியை நானும் எழுதினேன். பிரதிவாதி முதல் பாதியை கடன் வாங்கிய தேதி அன்று எழுதப்பட்டது. மற்ற விவரங்கள் நான் சாட்சி கையொப்பம் போடும் போது எழுதப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1- ல் எழுதியதும், சாட்சியுமாக நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், வாதியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் பிரதிவாதி, வாதியிடம் கடன் பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் நிரூபணவாக்குமூலத்தில் பிரதிவாதி, வாதியிடம் பெற்ற கடனுக்காக கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்ததாக கூறவில்லை என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் கடனுறுதிசீட்டில் பிரதிவாதி, வாதியிடம் கடன் பெற்ற தேதி 28.03.2019 என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். தாவா புரோநோட்டை எழுதிய சமயத்தில் பார்த்தேன். 2019 க்கு பிறகு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் வரை வா.சா.ஆ.1 ஐ பார்த்ததில்லை என்றால் இடையில் 1 முறை பார்த்துள்ளேன். நான் 2 முறை பார்த்ததாக

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

கூறும் கடனுறுதிசீட்டின் தேதி 29.03.2019 தேதியிட்ட கடனுறுதிசீட்டை தான் பார்த்தேன் 28.03.2019 தேதியிட்ட கடனுறுதிசீட்டை நான் பார்த்ததில்லை. நான் வாதிக்கு ஆதரவாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டு வாதியால் உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி, வாதியிடம் எந்த காலத்திலும் கடன் வாங்கவில்லை என்றும், வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

| |
|---|
| சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,<br>இராஜபாளையம். |